AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 10 PRINTED SIZE: 405.00cmï¿½ REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 2,651.00 ITEM ID: MY0064344499



29 JUN, 2025

# Malaysia eyes nuclear energy revival, stronger ties with Uzbekistan, Russia

Makkal Osai, Malaysia

## அணுசக்திக்கு உயிரூட்ட மலேசியா திட்டம்

# உஸ்பெகிஸ்தானுடன் இணைந்து செயல்படுத்த முடிவு



மாஸ்கோ, ஜூன் 29- உஸ்பெகிஸ்தான், ரஷ்யாவுக்கு 8 நாள் பணிநிமித்த வருகையை மேற்கொண்ட துணைப்பிரதமர் டத்தோஸ்ரீ ஃபடிலா யூசோப் இப்பயணத்தின் இறுதி நாளன்று வியூக அனைத்துலகப் பங்காளித்துவத்தை வலுப்படுத்தும் முயற்சிகளை மலேசியா இன்னும் உத்வேகத்துடன் முன்னெடுக்கும் என்று கூறினார்.

இந்த வருகையின்போது மலேசியாவின் அணுசக்தித் திட்டத்தை மீண்டும் உயிர்பெறச் செய்வதற்கு மலேசியா முயற்சிகளை எடுத்துள்ளது.

அதேசமயம் ஹலால் பொருளாதாரம், சுற்றுலா, எரிசக்தி முதலீடு, இஸ்லாமிய நிதி ஆகிய துறைகளிலும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற் குரியபேச்சுவார்த்தை களை இப்பயணத்தின்போது அவர் மேற்கொண்டார்.

இப்பயணத்தின்போது பல முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டது இந்த உறவுகளின் ஒரு முக்கிய மைல்கல்லாகத் திகழ்கிறது.

மலேசியா ஏற்கெனவே அணுசக்தி மேம்பாட்டில் கவனம் செலுத்தியது. 2021ஆம் ஆண்டிற்குள் இரண்டு அணுசக்தி உலைகளை அமைக்கவும் திட்டமிட்டிருந்தது. இருப்பினும் அந்த இரண்டு திட்டங்களும் கிடப்பில் வைக்கப்பட்டன.

மலேசியா அணுசக்தி கார்ப்பரேஷன் நிறுவனம் 2018ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். ஆனால் இப்போது அணுசக்தித் துறையை மேம்படுத்துவதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

எனவே இத்திட்டத்திற்கு மீண்டும் உயிர் கொடுப்பதற்கு மலேசியா திட்டமிட்டுள்ளது என்று டத்தோஸ்ரீ ஃபடிலா மேலும் சொன்னார்.

இந்தச் சந்திப்பின்போது உஸ்பெகிஸ்தான் அரசாங்கம் மலேசிய தேசிய எண்ணெய், எரிவாயு நிறுவனமான பெட்ரோலியம் நேஷனல் பெர்ஹாட் (பெட்ரோனாஸ்) நிறுவனத்திற்கு அதிகாரப்பூர்வ அழைப்பு விடுத்தது.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.